# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்.

## அசல் வழக்கு எண்.145/2017

**2021 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 08ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879 ஆம் ஆண்டின் 10-வது சட்ட விதிகளின் படி திருமதி.ஆர்.ஈஸ்வரி, Grade III B.C** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | :: | துரைசாமி | தொழில் | :: | |
| தந்தை / கணவர் பெயர் | :: | | கிராமம் | :: | |
| வயது | :: | | வட்டம் | :: | காஞ்சிபுரம் |
| நேரம் | :: | முற்பகல் 1.39 முதல் 1.47 வரை | | :: | |

வா.த.சா. 1 முதல் விசாரணை தொடர்ச்சி

**தாவா சொத்தின் சர்வே எண்.90/2 ல் விஸ்தீரணம் 17 சென்ட் என்றால் சரிதான். வாலாஜாபாத் வட்டாட்சியர் மீது நான் தாவா சொத்தினை உட்பிரிவு செய்ய வேண்டி நீதிமன்றத்தில் வழக்கு செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாவாவிலும் பிரமாணவாக்குமூலத்திலும் தாவா சொத்து அமைந்துள்ள விச்சாதாங்கல் கிராமத்தில் பிரதிவாதிக்கு தாவா சொத்தினை தவிர நிறைய சர்வே எண்ணில் நிலம் உள்ளதால் அதனுடன் சேர்த்து தாவா சொத்திற்கும் பட்டா பெற்றுள்ளாரா எனறு சொல்லியுள்ளேன். அது குறித்து நான் மனு ஏதாவது வருவாய்துறையில் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அது சம்பந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.**